**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.131/2021**
**DW3**

| | | |
|---|---|---|
| **Name** | : | சரசு |
| **Husband's Name** | : | ராமலிங்கம் |
| **Village** | : | மங்கலம் |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.10.2025.
A1 to 3 present.

**முதல் விசாரணை**

எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி ராஜசேகர் என் மகன். எதிரி கார்த்தி ் என் மருமகன். எதிரி சரண்யா என் மகள். எதிரிகள் மீது கொலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சொன்னார்கள். என் பெரிய மருமகன் ரமேஷ் என்பவரை கொலை செய்துவிட்டதாக வழக்கு போட்டுள்ளார்கள். ரமேஷ் இறந்த நாள் எனக்கு தெரியாது. ஆனால் 8 ந் தேதி மதியம் அவர் இறந்துவிட்டதாக ஊரில் இருந்தவர்கள் சொன்னார்கள்.( சாட்சி மாதம் வருடம் தெரியாது என்று கூறுகிறார்). 8ம் தேதி ராஜசேகர் எங்கள் வீட்டில் என்னுடன்தான் இருந்தார். அதற்கு முன் தினமும் ராஜசேகர் எங்கள் வீட்டில்தான் என்னுடன் இருந்தார். ரமேஷ் எங்கு குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் என் மகள் சம்பவத்திற்கு 3 வருடத்திற்கு முன்பிருந்து என் வீட்டில்தான் இருந்தார். ரமேசுக்கும், சரண்யாவுக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் ரமேஷ் அடிக்கடி குடித்துவிட்டு அவர் மனைவியை அடிப்பதும் , உதைப்பதுமாக இருந்தார். அதனால் என் மகளை நான் என் வீட்டிற்கே கூட்டிக்கொண்டு வந்துவிட்டேன்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ரமேஷ் அடிக்கடி என் மகளை அடித்தது , உதைத்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. என் மகள் சரண்யாவுக்கும், என் மருமகன் கார்த்திகேயனுக்கும் இடையே கள்ளத்தொடர்பு இருந்தது என்றால் அப்படி எதுவும் இல்லை. திருமணம் ஆனதில் இருந்து ரமேசும் சரண்யாவும் ரமேஷ் வீட்டில்தான் சுமார் 5 வருடம் சந்தோஷமாக இருந்தார்கள் என்றால் சரிதான். அதன்பின்னர் என் மகள் சரண்யாவுக்கும், மருமகன் கார்த்திகேயனுக்கும்

கள்ளத்தொடர்பு இருந்தது என்றும், அதனால் ரமேசும் சரண்யாவும் அதே வீட்டில் இருக்கக்கூடாது என்று தனது வசதிக்காக வாடகை வீட்டிற்கு சென்றார்கள் என்றால் சரியல்ல. அவர் ஓட்டுவீடு ஒழுகியதால் வாடகை வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். வாடகை வீட்டில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதன்பிறகு மற்றொரு வாடகை வீட்டிற்கு சென்றார்கள் என்றால் இல்லை. சம்பவம் நடந்தபோது இறந்துபோன ரமேசும் என் மகள் சரண்யாவும் ஒன்றாகதான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று இரவு 8.00 ரமேசுக்கும் சரண்யாவுக்கும் ஏற்பட்ட சண்டையில் ரமேசை கொலை செய்து விடுவதாக சரண்யா மிரட்டனார் என்றால் சரியல்ல. அன்று இரவு எதிரிகள் மூவரும் சேர்ந்து ரமேஷை கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னால் அதை நான் மறுக்கிறேன். மறுநாள் என் மகள் சரண்யா ரமேஷின் அக்கா மீனாவிடம் "உன் தம்பியை வந்து பார் எப்படி இருக்கிறார் என்று " என்று சொன்னார் என்றால் சரியல்ல. கொலை செய்த பின்பு ரமேஷின் சடலத்தை எதிரிகள் மூவரும் அப்புறப்படுத்த முயற்சி செய்தார்கள் என்றால் சரியல்ல. அதை அக்கம் பக்கம் இருந்தவர்கள் தடுத்தார்கள் என்றால் சரியல்ல. மதியம் 2 மணிக்குமேல் சென்று ரமேஷின் பிரேதத்தை பார்த்தேன். எதிரிகளை நான்தான் ஜாமீனில் எடுத்தேன். ஜாமீனில் என் மகனும், மகளும் என்னுடன்தான் இருந்தார்கள் , அவர்கள் சம்பவத்தில் ஈடுபட வாய்ப்பில்லை என்று சொல்லிதான் ஜாமீனில் எடுத்தேன். என் மகளும், மகனும் வழக்கில் சம்மந்தப்படவில்லை என்று நான் மனு அனுப்பவில்லை. எதிரிகளுக்கு தண்டனை கிடைத்தால் நான் அதிகமான பாதிப்புக்கு உள்ளாவேன் என்றால் சரிதான். என் மகள் பிரியாவும் பாதிக்கப்படுவார் என்றால் சரிதான். நடக்காததை நடந்ததாக சொல்லி எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.